# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள் - **05.06.2025**</u>

<u>**முன்னிலை**</u>

## திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## <u>வழக்கு எண். SA 12999/SCIC/2023</u>

திரு.S.குருசாமி — மேல்முறையீட்டாளர்
எண்.39-ஜெ/6 ஸ்ரீமாரியம்மன் நகர்
எஸ்.திருவேங்கிடபுரம்
ஆர்.ரெட்டியப்பட்டி அஞ்சல்
இராஜபாளையம் வட்டம்
விருதுநகர் - 626 136.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
சார்பதிவாளர் அலுவலகம்
கீழராஜகுலராமன்,
விருதுநகர் மாவட்டம்

<u>**ஆணை**</u>

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 06.05.2023 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 06.06.2023 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 24.06.2023 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 04.07.2023 |
| 5. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 18.07.2023 |
| 6 | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 06.11.2024 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 21.12.2024 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / கீழராஜகுலராமன் சார்பதிவாளர் அலுவலகம், விருதுநகர் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “கீழராஜகுலராமன் சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரையம் ஆவணமாக பதிவு செய்யப்பட்ட 1வது புத்தகம் ஆவணம் எண்.2794/2012 நாள் 25/06/2012 மற்றும் ஆவணம் எண்.2795/2012 நாள் 25/06/2012 - தொடர்பாக - உயில் மூலமாக சொத்தை பெற்ற ஒருவர் அந்த சொத்துகளை கிரையம் செய்யும்போது உயில் மூலமாக சொத்தை பெற்றவர் அந்த சொத்தை கிரையம் செய்யும்போது கிரையம் ஆவணமாக பதிவு செய்யப்படுவதற்கு என்னென்ன ஆவணங்களை சார்பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்கிற விவரங்களை வழங்குக” என்பன போன்று 14 (பதினான்கு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (05/06/2025) காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் விருதுநகர் மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து கலந்து கொண்டார். பொது அதிகார அமைப்பின் சார்பில், ஆணையத்தின் முன் திரு.சு.இளங்கோவன், சார்பதிவாளர் (பொறுப்பு), கீழராஜகுலவர்மன் சார்பதிவகம் அவர்கள் ஆஜரானார். மனுதாரர், தனது 18/07/2023 தேதியிட்ட பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவில் பொதுத் தகவல் அலுவலர், இனம் 1-க்கான தகவலைத் தவிர மற்ற இனங்களுக்கு அளிக்கப்பட்ட அனைத்து தகவல்களும் சரியானதாக இல்லை எனத் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நகல், இன்று பொதுத் தகவல் அலுவலரிடம் வழங்கப்பட்டது. எனவே, பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர், கீழராஜகுலவர்மன் சார்பதிவகம் அவர்கள் மனுதாரருக்கு, ஆவணங்களின்படியான சரியான / திருத்திய தகவல்களை இனம்-1-ஐத் தவிர மற்ற அனைத்து இனங்களுக்கும் இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர், மனுதாரருக்கு அனுப்பி வைத்த தகவலின் நகல் மற்றும், மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகலை ஆணையத்தில் 17/07/2025 அன்று பிற்பகல் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12999/SCIC/2023</u>**

**பெறுநர்**
**பொதுஅதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்
கீழராஜகுலராமன்,
விருதுநகர் மாவட்டம்

**மேல்முறையீட்டாளர்**
திரு.S.குருசாமி
எண்.39-ஜெ/6 ஸ்ரீமாரியம்மன் நகர்
எஸ்.திருவேங்கிடபுரம்
ஆர்.ரெட்டியபட்டி அஞ்சல்
இராஜபாளையம் வட்டம்
விருதுநகர் - 626 136.

RG/PC